# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 02.09.2026**

**முன்னிலை**

## முனைவர் அதுல்ய மிஸ்ரா, இ.ஆ.ப (ஓய்வு)
## மாநில தகவல் ஆணையர்

*****

**வழக்கு எண். SA 7393/SCIC/2025**

திரு ப. பாலசுப்பிரமணியன் மேல்முறையீட்டாளர்

//எதிர்//

பொதுத் தகவல் அலுவலர்/ ....... பொதுஅதிகார அமைப்பு
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
பல்லாவரம், சென்னை 600 044

**ஆணை**

| | | |
|---|---|---|
| 1. | மனுதாரரின் தகவல் பெறும் உரிமைச் சட்ட மனு | 29.11.2024 |
| 2. | மனுதாரரின் முதல்மேல்முறையீட்டு மனு | 01.02.2025 |
| 3. | மேல்முறையீட்டு அலுவலரின் பதில் | 28.02.2025 |
| 4. | மனுதாரரின் இரண்டாம் மேல்முறையீட்டு மனு | 07.05.2025 |
| 5. | அதன்பின்பு பொதுத் தகவல் அலுவலரின் பதில் | 09.10.2025<br>31.12.2025 |

மனுதாரர், பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், பல்லாவரம், சென்னை என்ற முகவரிக்கு சட்டப்பிரிவு 6(1)-ன் கீழ் 29.11.2024 தேதியிட்டு அனுப்பிய மனுவில், குரோம்பேட்டை நியூகாலனி 14வது குறுக்குத்தெரு இல்லம் அப்பார்ட்மெண்ட் கீழ் குடியிருப்பு வாங்கியவர் தனது தாயார் திருமதி பட்டம்மாள் என்பவர் என்பதற்கான பத்திர எண் மற்றும் பதிவு

செய்யப்பட்ட நாள் ஆகியவற்றின் சான்றொப்பமிடப்பட்ட நகல் என்பது தொடர்பாக 4 இனங்களில் வழங்குமாறு கோரியுள்ளார்.

2. இன்றைய விசாரணைக்கு மனுதாரர் ஆஜரானார். பொதுத் தகவல் அலுவலர் சார்பில் திருமதி க. ஜெயப்பிரியா, உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், பல்லாவரம், சென்னை ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

3. மனுதாரர் தனது மனுவில், கீழ்தள அப்பார்ட்மெண்ட், 14வது குறுக்குத்தெரு, நியூகாலனி, குரோம்பேட்டை என்ற முகவரியில் உள்ள சொத்தினை வாங்கிய காலஞ்சென்ற தனது தாயார் திருமதி பட்டம்மாள் என்பவர் பெயரில் பதிவு செய்யப்பட்ட பத்திர எண், பதிவு செய்யப்பட்ட நாள் மற்றும் அதன் தொடர்பான தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார். அதற்கு பொதுத் தகவல் அலுவலரால் 31.12.2024 தேதியிட்டு வழங்கப்பட்ட பதிலில் பதிவுத்துறை இணையவழி சேவை மூலம் உரிய கட்டணம் செலுத்தி இணையவழியில் நகல் பெற்று ஆவண எண், பதிவு செய்யப்பட்ட நாள் போன்ற தகவல்களை அறிந்து கொள்ளலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. இன்றைய விசாரணைக்கு பொதுத் தகவல் அலுவலர் சார்பில் ஆஜரான அலுவலர் மனுதாரர் தனது மனுவில் சர்வே எண் விவரத்தினைக் குறிப்பிடவில்லையென்பதால், அவர் கோரிய தகவல்களை வழங்க இயலவில்லையென்று தெரிவித்தார். ஏனெனில் மனுதாரர் கோரிய தகவல்களை வழங்குவதற்கு சர்வே எண் மிகவும் அத்தியாவசியமானது என்பதை எடுத்துரைத்தார். **எனவே, மனுதாரர் 15.09.2026 அன்று பிற்பகல் 11 மணிக்கு பொதுத் தகவல் அலுவலர் அலுவலகத்திற்கு நேரில் செல்லுமாறும், அன்றைய தினம் பல்லாவரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியரும் பல்லாவரம் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நேரில் செல்லுமாறும் ஆணையத்தால் உத்தரவிடப்படுகிறது. அன்றைய தினம் பல்லாவரம் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் மற்றும் சார்பதிவாளர் ஆகியோர் மனுதாரர் கோரிய தகவல்கள் தொடர்பான ஆவணங்களை மனுதாரருக்கு பார்வையிடுவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும், அதனடிப்படையில் மனுதாரரின் மனுவில் கோரிய தகவல்கள் தொடர்பான ஆவண நகல்களை அவருக்கு வழங்குமாறும், அதுகுறித்த அறிக்கையினை ஒரு வாரகாலத்திற்குள் ஆணையத்திற்கு அனுப்பிவைக்குமாறும் பொதுத் தகவல் அலுவருக்கு உத்தரவிடப்படுகிறது. இத்துடன் இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(அதுல்ய மிஸ்ரா)**
**மாநில தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவிப்பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 7393/SCIC/2025</u>**

**பெறுநர்**

**பொது அதிகார அமைப்பு**

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
பல்லாவரம், சென்னை 600 044

பொதுத் தகவல் அலுவலர்/
தலைமையிடத்து துணை வட்டாட்சியர்,
வட்டாட்சியர் அலுவலகம்,
பல்லாவரம், சென்னை 600 044

**மனுதாரர்**

திரு ப. பாலசுப்பிரமணியன்,
233E, கோவிந்தசாமி தெரு,
சுதர்சன் நகர் II,
சின்ன காஞ்சிபுரம் 631 501

TK/PS